பூமிதானமா? ரத்தக் கிளர்ச்சியா? Regd. No. M 6207.

கிராமோதயம்

763/1-54
CONNEMARA PUBLIC LIBRARY
3-JAN 1956
MADRAS

ஆசிரியர் : ப. கோவிந்தசாமி

(அகில பாரத சர்க்கா சங்கத்தின் மாதமிருமுறை பத்திரிகை)

மலர் 2 திருப்பூர் - பிப்ரவரி 1 * 1954 * விலை 1 அணா இதழ் 7

சர்வோதய பக்ஷம்

(ஊக்கத்தோடு உதவுங்கள்)

நூல் காணிக்கைகள்

காந்தியடிகளின் மறைவு தினம் (ஜனவரி 30) முதல் அவர் அஸ்தி கரைத்த தினமாகிய பிப்ரவரி 12-ந் தேதிவரை தேசத்திலுள்ள கதரன்பர்களும், சர்வோதயவாதிகளும், காந்தீய லட்சியங்களை மக்களிடையே பரப்புவதற்காக கிராமம் கிராமமாக சுற்றிவருவார்கள். இந்த யாத்திரைகளில் பூமிதான பிரசாரமும், பூமிதானம் பெறுதலும், நூல்காணிக்கை சேர்த்தலும் முக்கிய இடம் பெறும். சர்வோதய லட்சியங்களில் நம்பிக்கை வைத்துள்ள அன்பர்கள் யாவரும் இந்த லட்சியங்களில் தமக்குள்ள நம்பிக்கைக்கு அறிகுறியாக 1 சிட்டம் நூல் சர்வ சேவா சங்கத்திற்கு காணிக்கை செலுத்துவார்கள்.

சர்வோதய மேளா

இம்மாதிரி யாத்திரை செய்பவர்களும், மற்றும் கதரன்பர்களும், சர்வோதயவாதிகளும் சேர்ந்து பிப்ரவரி 12தேதி காந்தியடிகளின் அஸ்தி கரைத்த புண்ய ஸ்தலங்களில் ஒரு தேசீய உற்சவமாகக் கொண்டாடுவார்கள்.

வேண்டுகோள்

சர்வ சேவா சங்கத்தின் கிளைத் தொண்டர்களும், கிராமோதய கதர் சங்க அன்பர்களும் வகுத்து செய்துவரும் வேலைத் திட்டங்களில் பொதுமக்கள் அனைவரும் ஒத்துழைத்து, வெற்றி பெறச் செய்வார்கள் என்று நம்புகிறோம்.

— ப. கோவிந்தசாமி

பர்மா தேசத்தில் நில சீர்திருத்தங்கள்!

நிலத்தை தேசீய மயமாக்கும் திட்டம்

தென்னாட்டு அளகாபுரி என்று பெயர்பெற்ற செட்டிநாட்டு செல்வம் பர்மா தேசத்திலிருந்து வந்து குவிந்தது என்று சொல்வார்கள். அங்கு இன்னமும், நமது இந்தியர்களுக்கு நிலம் ஏராளமாக சொந்தமாக இருக்கிறது. அந்நாட்டு சர்க்கார் நிலத்தை தேசீயமயமாக்கும் ஒரு சட்டத்தை 1948ம் ஆண்டு இயற்றியது. அதில் குறிப்பிடப்பட்டுள்ள நஷ்ட ஈடுத் தொகைகளை மீண்டும் கணிசமாக குறைத்து மீண்டும் ஒரு சட்டத்தை சென்ற செப்டம்பர் மாதம் பர்மா சர்க்கார் இயற்றியுள்ளது. இதைத் தொடர்ந்துதான் நமது நிலச்சுவான்தார்களின் நலன்களைப் பாதுகாக்கும் பொருட்டு ஸர் மிர்ஜா இஸ்மேல் தலைமையில் ஒரு இந்திய தூது கோஷ்டி பர்மாவுக்குச் சென்றுவந்தது.

நஷ்டஈடு புது விகிதங்கள்

புதிய சட்டப்படி முதல் 100 ஏக்கர் நிலத்திற்கு நில வரி தொகைக்கு பன்னிரண்டு மடங்கு தொகையை நஷ்ட ஈடாகக் குறிப்பிடப்பட்டிருக்கிறது. மேல்கொண்டு ஒவ்வொரு 100 ஏக்கருக்கும் விகிதாசார ரீதியில் நஷ்ட ஈடு குறைக்கப்பட்டுக்கொண்டே வரப்படுகிறது. 1,100 ஏக்கருக்கு மேல் வைத்திருக்கும் நிலச்சுவான்தாருக்கு நில வரிக்கு சமமாகத்தான் நஷ்ட ஈடு தரப்படும். பர்மாவில் நிலவரி (Land Tax) ஏக்கருக்கு ரூ. 0-12-0 விலிருந்து ஏக்கருக்கு ரூ. 10/- வரை வித்தியாசப்படுகின்றன.

ஊர் பொதுவாம் நிலம்

தேசத்திற்குப் பொதுவான நிலம் என்று கருதப்படும் நிலத்திற்கு நில வரிக்கு சமானமாகத்தான் நஷ்ட ஈடு அனுமதிக்கப்படும்.

இந்த சட்டத்தின் கீழ் சுமார் 8,000 இந்திய நிலச்சுவான்தார்களும் சுமார் 5,000 பர்மீய நிலச்சுவான்தார்களும் பாதிக்கப்படுவார்கள்.

மொத்தம் நஷ்டஈடு

முன்பு இயற்றப்பட்ட சட்டப்படி நிலவரிக்கு பன்னிரண்டு பங்கு நஷ்ட ஈடாக எல்லா நிலச்சுவான்தார்களுக்கும் உத்திரவாதமளிக்கப்பட்டிருந்தது. முன் சட்டப்படி பர்மாவில் நிலம் படைத்த இந்திய நிலச் சொந்தக்காரர்களுக்கு சுமார் ரூ. 10 கோடி நஷ்ட ஈடாகக் கிடைக்குமென்று எதிர்பார்த்ததற்கு பதில், புதிய சட்டப்படி சுமார் ரூ. 3 அல்லது 4 கோடிதான் நஷ்ட ஈடு கிடைக்கக்கூடும். இந்த நஷ்ட ஈடு தொகையும் பல தவணைகளில் சர்க்கார் கடன் பத்திரங்களாக வழங்கப்படுமாம். இந்த சட்டம் இயற்றப்பட்ட தேதியிலிருந்து நிலத்தை அடமானமோ, விற்பனையோ, போக்கியமோ, செய்ய இயலாதென்றும் விதி செய்யப்பட்டிருக்கிறது.

— ரா. மருதநாயகம்,

பல ராஜ்யங்களில் கல்வி முறை மாற்றம்

கல்வி சீர்திருத்தம்

சென்னை ராஜ்யத்தில் இவ்வாண்டு ஆரம்ப முதலே புதிய கல்வித் திட்டம் அமுலாக்கப்பட்டு, அதன் காரணமாக அரசியல் கொந்தளிப்புகள் பல தோன்றின. அதை நன்கு ஆராய்ந்து, பரிசீலனை செய்து, தங்கள் சிபார்சுகளை வெளியிடுவதற்கு பேராசிரியர் பருளேகர் தலைமையில் ஒரு கமிட்டி அமைக்கப்பட்டது. அதன் சிபார்சுகளும் சமீபத்தில் வெளியாகியுள்ளன. அவைகள் அடுத்த ஆண்டிலிருந்து அமுலாக்கப்படும் என்று எதிர்பார்க்கலாம்.

(தொடர்ச்சி 28-ம் பக்கத்தில் காண்க)

கிராமோதயம்

பிப்ரவரி 1 1954

பூமிதானமா? ரத்தக்கிளர்ச்சியா?

[பூமிதான யக்ஞத்திற்கு போதிய ஆதரவு தமிழ் மாகாணத்தில் இன்னமும் ஏற்படாமலிருப்பதற்கு அந்த இயக்கத்தில், நடுத்தர வகுப்பினர்கள் நாளது வரை காட்டிவந்துள்ள அசிரத்தையையே காரணம் என்று செட்டிநாட்டு சுற்றுப்பிரயாணத்தில் ஸ்ரீ சங்கர்ராவ் தேவ் அவர்கள் கூறினர். சந்தர்ப்பவசமாக இம்மாதிரி சோர்வுற்றிருக்கும் மக்களுக்கு எச்சரிக்கை செய்திருப்பது போல் ஸ்ரீ விநோபாஜியும் அதே சமயத்தில் தனது பூதான யாத்திரையில் பேசியதின் சுருக்கத்தைக் கீழே தருகிறோம். சர்வோதய பக்ஷத்தில் யாத்திரை செய்துவரும் சர்வோதய ஊழியர்களுக்கு இது ஒரு விசேஷ செய்தியாகக் கருதவேண்டும்.

— *ஆசிரியர்]*

ஜப்பானில் குறைந்த நிலம்; அதிக விளைச்சல்

நம்மிடமிருக்கும் நிலத்தைக் காட்டிலும் ஜப்பானியர்களிடம் சராசரி மூன்றில் ஒரு பங்கு நிலம் தான் இருக்கிறது. ஆனால் நாம் பயிர் செய்து உற்பத்தி செய்வது போல் மூன்று மடங்கு அதிகம் அவர்கள் உற்பத்தி செய்கிறார்கள்.

சொந்த வேலையும்; கூலி வேலையும்

இங்கு எல்லா வேலைகளும் தொழிலாளர்கள் மூலம் நடைபெறுகிறது. தொழிலாளர்கள் நியாயமான வேலை செய்வதில்லை. இன்று வேலை செய்யும் மாடுகளின் நிலை என்னமோ, அதேதான் வேலை செய்யும் தொழிலாளர்களின் நிலைமையும். முதலாளிகளும், தொழிலாளர்களும் ஒருவர் மற்றவரை ஏமாற்ற முயன்று வருகிறார்கள். ஒருவர் வேலையில் ஏமாற்றுகிறார்; மற்றவர் வேலைக்கு கொடுக்கும் கூலியில் ஏமாற்றுகிறார்!

இந்தியாவில் நிலச்சுவான்தார்களும், பண்ணையாட்களும் இருக்கும் வரை நமது உற்பத்தி அதிகரிக்க முடியாது.

எல்லோரும் இன்புற

நமது எண்ணம் யாவரையும் இன்புற்று வாழச் செய்வதே. உண்பதற்கு முன்னரும் ஈகை; பிறகும் ஈகை என்று நமது மதக்கோட்பாடுகள் கூறுகின்றன! இஸ்லாம் மதமும் ஆண்டவன் அளித்ததை அள்ளிக்கொடு என்று கூறுகிறது! யேசுநாதர் அயலாரிடம் அன்பு செலுத்தச் சொல்கிறார்!

நான் இன்று புதிதாக உபதேசம் எதையும் செய்யவில்லை. இந்த உபதேசங்கள் யாவும் நமது பெரியோர்கள் அளித்துள்ளார்கள். "பூமிதான யக்ஞம்" என்ற எண்ணம் தோன்றியது. அதை நான் ஆரம்பித்து வைத்தேன். நிலத்திற்காக உலகெங்கும் ரத்த வெள்ளம் பெருகிற்று. "பூமிதான யக்ஞம்" வெற்றியடையாவிடில் உலகெங்கும் வீசும் பலாத்காரக் காற்று நம் தேசத்திலும் வீசாதென்று சொல்வதற்கில்லை. அதை யாரும் தடை செய்யமுடியாது.

பாரெல்லாம் பரமன் சொத்து

பூமிதானத்தின் பொருள்—பூமிக்கு உடைமை இல்லை என்பதே, நேரடியாக நாம் நிலத்திற்கு சொந்தக்காரர்களல்ல என்பதை ஒப்புக்கொள்ள வேண்டும். எல்லோருக்கும் நிலத்திற்கு உரிமை இருக்கிறது. எல்லோருக்கும் நிலம் கிடைக்க வேண்டும். இதை நீங்கள் ஒப்புக்கொள்ளாவிடில் நான் உங்களிடமிருந்து நிலத்தைவாங்கமாட்டேன். நிலமெல்லாம் பரமனுக்குச் சொந்தம். இதை ஒப்புக்கொண்ட பின்னர்தான் நான் உங்களிடமிருந்து நிலதானம் பெறவிரும்புகிறேன்.

ஆண்டிக்கும் பசி; ஆண்டைக்கும் பசி

ஏழைக்கும் பசி; பணக்காரர்களுக்கும் பசி இருக்கிறது. எல்லோருக்கும் உணவும், உடையும், உறையுளும், கல்விகற்க வசதியும், நோயடைந்தால் மருந்தும் கிடைக்க வேண்டும். ஆண்டவன் மூச்சு விடுவதற்கு எல்லோருக்கும் ஒரே மூக்கைக் கொடுத்திருக்கிறான். இவன் ஏழை அதனால் இவன் குழந்தைக்கு ஒரு மூக்கு போதும்; அவன் பணக்காரன் அதனால் அவன் குழந்தைக்கு நான்கு மூக்குகள் வேண்டும் என்று கடவுள் நினைக்கவில்லை!!

எல்லோரும் சமம்

ஆகையால் எல்லோருக்கும் சமமான உரிமை கிடைத்தாக வேண்டும். ஏழை பணக்காரன் இருவர் குழந்தைகளும் ஆடை, ஆபரணங்களணியாமலே பிறந்தன. ஆகையால் ஏழையின் குழந்தை ஆடையில்லாமல் குளிரில் விரைந்து சாகும் பொழுது, பணக்காரரின் குழந்தைக்கு தேவைக்கதிகமான துணிகளணிவிக்க வேண்டுமென்பதில்லை. இதனால் இருவருக்கும் நாசமே விளையும்!

— **ஸ்ரீ விநோபா**

அமெரிக்க ராணுவ உதவி; சில அனுபவங்கள்

1952-வது வருட ஐரோப்பிய நாடுகளுக்கு அமெரிக்க உதவியாக சுமார் *250* கோடி டாலர் (சுமார் ரூ. *1250* கோடி) கொடுத்துள்ளார்கள் என்றும், அது வருடந்தோறும் கிடைக்குமென்று கருதி நம் பொருளாதாரப் பிரச்னைகளை கவனித்து வர இயலாதென்றும் சமீபத்தில் ஸிட்னியில் கூடிய காமன்வெல்த் நாடுகளின் நிதி மந்திரிகள் மகாநாட்டில் பிரிட்டிஷ் நிதி மந்திரி ஸ்ரீ பட்லர் கூறினர்.

யாருக்கு உதவி?

"ஆனால் சில வாரங்களுக்குமுன் பாரிஸ் மாநகரில் கூடிய வட அட்லாண்டிக் பாதுகாப்பு ஒப்பந்த நாடுகளின் (North Atlantic Treaty organisation) கௌன்ஸில் கூட்டத்தில், அமெரிக்க அதிகாரிகள் தங்கள் வாக்குறுதிகளை நிறைவேற்றுவதில் சந்தேகம் வேண்டாம் என்றும், இதற்கு அத்தாட்சியாக மேற்படி நாடுகளுக்கு தனது அணு ரகசியங்கள் சிலவற்றை வெளியிட்டு உதவுவதாகவும் கூறினர். இந்த ராணுவ ரகசிய உதவியின் பயன் யாதெனில், இந்த ஒப்பந்தத்தில் ஈடுபட்டுள்ள 14 நாடுகள் சேர்ந்து *1954*-ம் வருடத்தில் மொத்தமாக *6500* கோடி டாலர் (சுமார் ரூ. *32,500* கோடி; இந்தத் தொகை இந்தியாவின் தேசிய வருமானத்தைவிட சுமார் மூன்று மடங்கு அதிகமும். இந்திய பாதுகாப்பு செலவைக் காட்டிலும் *162* மடங்கு அதிகமும் ஆகும்!!) தமது ராணுவ பாதுகாப்புக்காக செலவிடுவதென்று முடிவு செய்துள்ளன. இதில் பெரும் பகுதி அமெரிக்க தளவாடங்களுக்காகவே ஈடுபடுத்தப்படும்!! ஐரோப்பிய நாடுகளுக்கு அமெரிக்க உதவி கிடைக்கிறதா, இல்லை அமெரிக்க ராணுவ தளவாடத் தொழிலதிபர்களுக்கு ஐரோப்பிய உதவி கிடைக்கிறதா? என்று சந்தேகப்பட வேண்டியிருக்கிறது."

(தொடர்ச்சி 28-ம் பக்கத்தில் காண்க)

3 - JAN 1956

திருநெல்வேலி விபாக் கிராமோதயக் கதர் சங்கங்களின் வேலை அறிக்கை

(1953 ஜனவரி முதல் '53 நவம்பர் முடிய சங்கவாரியாக மோத்த அறிக்கை)

வேலை செய்த மாதம்	ஊர் பெயர்	உற்பத்தி செய்த சிட்டம்		நூலுக்குப் பதில்		நூற்புக் கருவிகள் எடுத்துக் கொண்டது ரூ.	நூலுக்காக நிகர் ரொக்கம் பெற்றுக் கொண்டது ரூ.	பஞ்சு, கதருக்காக ரொக்கம் பெற்றுக் கொண்டது ரூ.
		சிட்டம்	கிரயம் ரூ.	கதர் எடுத்துக் கொண்டது ரூ.	பஞ்சு ப. பஞ்சு எடுத்துக்கொண்டது ரூ.			
	கோவில்பட்டி							
8	கோவில்பட்டி	5,336	1,279	2,345	524	141		1,731
4	ஊத்துப்பட்டி	2,755	650	554	278	262		444
4	அய்யனேரி I	8,783	2,092	1,002	646	267	177	
4	அய்யனேரி II	4,984	1,186	329	439	305	113	
	காலாங்கரைப்பட்டி							
4	சங்கரலிங்கபுரம்	1,958	484	572	172	28		288
3	அழகப்பபுரம்	2,515	620	204	174	78	164	
3	காலாங்கரைப்பட்டி	12,273	2,984	1,852	1,011	97	24	
3	காளாம்பட்டி	1,214	293	201	176	68		152
3	வெயிலுகந்தபுறம்	1,401	358	122	167	129		60
2	வானரமுட்டி	2,332	562	263	309	352		362
	கழுகுமலை							
5	ராமலிங்கபுரம்	8,484	2,035	1,197	475		363	
5	குருவிகுளம்	16,364	3,972	2,124	1,148		700	
4	மலைப்பட்டி	3,440	844	437	274		133	
	சங்கரன்கோவில்							
8	மீன்துள்ளி	23,929	5,776	2,583	1,964		1,229	
5	நாரணபுரம்	6,163	1,487	803	515		169	
4	நவநீதகிருஷ்ணபுரம்	2,379	553	202	179		172	
4	சின்னகொயிலான்குளம்	1,026	247	154	91		2	
2	மருக்காலன்குளம்	927	218	75	106		37	
3	தளவாய்புரம்	1,605	381	193	118		70	
3	நெற்கட்டுஞ்செவல்	702	165	53	51		61	
3	சங்கரன் கோவில்	2,783	656	427	11		218	
	புதுப்பட்டி							
6	சாமிநாதபுரம்	2,461	582	382			200	
5	குருஞ்சாக்குளம்	22,279	5,436	2,484	1,545		1,407	
6	காசிலிங்கபுரம்	15,342	3,740	1,630	960		1,150	
6	வெள்ளாகுளம்	13,187	3,133	1,676	805		652	
3	சங்குபட்டி	2,330	557	298	110		149	
	கரிவலம்வந்தநல்லூர்							
6	கரிவலம்வந்தநல்லூர்	24,253	5,758	2,880	1,571	171	1,136	
6	விஜயரங்கபுரம்	10,398	2,475	2,452	444	234		655
6	மீனாக்ஷியாபுரம்	1,888	201	150	56			5
4	சென்னிகுளம்	6,796	1,603	1,440	412	13		262
4	மணலூர்	875	207	120	43	6	38	
3	செண்பகபுரம்	1,911	448	160	144		144	
3	பனையூர்	1,686	402	253	70		79	
2	கலிங்கப்பட்டி	2,867	683	1,010	250	955		1,532
	புளியங்குடி							
5	விஸ்வநாதப்பேரி	3,536	816	492			324	
5	சிவகிரி	4,415	1,024	1,179	255			410
3	சேந்தமரம்	1,813	425	288	185			48
1	வாசுதேவநல்லூர்	1,181	276	293	88			105
1	நகரம்	511	120	62	34		24	
	திருநெல்வேலி							
3	வேப்பன்குளம்	737	182	233	127	85		263
2	முனைஞ்சிபட்டி	216	51	923	37			909
2	சேர்மாதேவி	52	12	343	23			354
	திருச்செந்தூர்							
2	ஆறுமுகனேரி	3,610	902	130	324	56	392	
		2,33,097	55,875	34,570	16,311	3,247	9,327	7,580

3 - JAN 1956
MADRAS

வேலை செய்த மாதம்	ஊர் பெயர்	உற்பத்தி செய்த சிட்டம் — சிட்டம்	உற்பத்தி செய்த சிட்டம் — கிரயம் ரூ.	நூலுக்குப் பதில் — கதர் எடுத்துக் கெண்டது ரூ.	நூலுக்குப் பதில் — பஞ்சு ப. பஞ்சு எடுத்துக்கொண்டது ரூ.	நூற்புக் கருவிகள் எடுத்துக் கொண்டது ரூ.	நூலுக்காக நிகர் ரொக்கம் பெற்றுக் கொண்டது ரூ.	பஞ்சு, கதருக்காக ரொக்கம் பெற்றுக் கொண்டது ரூ.
	B. F.	2,33,097	55,875	34,570	16,311	3,247	9,327	7,580
	திசையன்விளை							
7	குட்டம்	12,748	3,274	1,340			1,934	
6	காரிகோவில்	2,717	673	207			466	
5	கரைசத்துபுதூர்	13,651	3,405	820			2,585	
5	உவரி	3,142	783	177			606	
3	இராமன்குடி	1,907	474				474	
1	விஜயநாராயணம்	187	45	19	19		7	
2	குமடிக்கோட்டை	5,293	1,322	498			824	
1	செல்வமருதூர்	1,802	442	512	188			258
1	முதுமொத்தமொழி	855	212	92			120	
	ஏரல்							
5	உவரிமாநகர்	7,426	1,851	1,111	743	5		8
2	பெருங்குளம்	547	137	64	32		41	
2	சிவகளை	2,096	523	320	222			19
	சிப்பிப்பாரை							
11	கஸ்தூரிரெங்கபுரம்	37,866	8,870	5,548	1,913	374	1,035	
6	சிப்பிப்பாரை	32,814	7,731	4,174	1,757	209	1,591	
5	வரகனூர்	15,296	3,643	2,463	1,133	181		134
6	மைப்பாரை	10,110	2,366	1,892		8	466	
6	நடுவப்பட்டி	10,713	2,549	1,855	569	56	69	
4	பிள்ளையார்நத்தம்	4,104	962	673	151		138	
4	தோப்புரெட்டிபட்டி	4,826	1,139	644	250	132	213	
2	நரசிம்மபுரம்	1,849	438	203	102	15	118	
	விளாத்திகுளம்							
7	நமசிவாயபுரம்	25,881	6,367	4,004	807		1,556	
7	S. குமாரகிரி	7,390	1,777	853	349		575	
7	இடைச்சியூரணி	9,734	2,389	1,812	126		451	
5	கழுகாசலபுரம்	9,522	2,335	1,270	520		545	
6	பிள்ளையார்நத்தம்	2,587	637	400	176		61	
7	கீழவிளாத்திகுளம்	7,549	1,824	1,457	342		25	
4	T. குமாரசுப்ரமணியபுரம்	3,472	855	508	158		189	
2	A. வேலாயுதபுரம்	1,216	295	196	68		31	
	கடம்பூர்							
4	கீ. குமரட்டையாபுரம்	4,332	1,050	509	372	237		68
4	ஒ. சரவணபுரம்	5,724	1,418	513	584	292	29	
4	கழுகாசலபுரம்	7,742	1,871	475	743	449	204	
3	பரம்புக்கோட்டை	4,340	1,035	356	378	412		111
2	கடம்பூர்	2,530	608	554	215	454		615
2	ஒட்டநத்தம்	1,046	260	232	Nil	158		130
3	கந்தசாமிபுரம்	1,393	333	102	64	12	155	
	ஏழாயிரம்பண்ணை							
5	சங்கரபாண்டியபுரம்	16 986	4,046	1,933	1,079	252	782	
		5,14,490	1,23,814	72,256	29,371	6,493	24,617	8,923

கிராம சங்கம் A. I. S. A. யிலிருந்து நூலுக்காக ரொக்கம் பெற்றுக்கொண்டது ரூ. *15,694*

"நைனுக்கவுண்டன்வலசு"-தமிழகத்தின் "பவனுர்!"

"காஞ்சனமுக்தி"

ஸ்ரீ வினேபாஜீ 1951-ல் தனது சரித்திரப் பிரசித்தி பெற்ற சர்வோதய யாத்திரையையும், பூமிதான யாத்திரையையும் ஆரம்பிக்கும் முன்னர் தாம் நதிக்கரையிலுள்ள பவனுர் ஆசிரமத்தில் "காஞ்சனமுக்தி" (அல்லது "பணத்திலிருந்து விடுதலே") ஆராய்ச்சிகளில் ஈடுபட்டிருந்தது ஞாபகமிருக்கலாம். சமூகம் இன்று பணத்திற்குக் கொடுக்கும் மதிப்பையும், முக்கியத்துவத்தையும், உழைப்புக்கும், உழைப்பாளிகளுக்கும் கொடுத்து, தனது அடிப்படைத் தேவைகளே தாமே உற்பத்தி செய்து கொள்வதே அந்த ஆராய்ச்சிகளின் அடிப்படை நோக்கம்; தோட்டத்திற்குத் தண்ணீர் இறைப்பதற்கு ராஹட் என்ற சுற்றுக் 'கமலே'யை, ஆசிரமவாசிகளே சுற்றுவார்கள். கலப்பை பூட்டி எருதுகளேக் கொண்டு நிலத்தை உழுவதற்குப் பதிலாக, அவர்களே மண்வெட்டியால் பக்குவப் படுத்துவார்கள். இன்றும் இதே ஆராய்ச்சிகள் அங்கு நடைபெறுகிறது.

ஸ்ரீ வைரவ லிங்கம்

பவனுர் ஆசிரமம் "விவசாயத்தில்" ஆரம்பித்த ஆராய்ச்சிகள் இயற்கையாகவே தாராபுரம் வட்டாரத்திலுள்ள நைனுக்கவுண்டன்வலசில் "கதர் வேலே"யின் ஆதாரத்தின் மீது ஆரம்பித்து வளர்ச்சிபெற்று இன்று "விவசாயம்" வரை வளர்ந்துள்ளது. இந்த வளர்ச்சி கதர் தொண்டருள் பெரும் தொண்டரான ஸ்ரீ சு. வைரவலிங்கத்தையே சாரும்.

கதர் பயிற்சிகள்

1951-வது ஆண்டில் இந்த கிராமத்தில் நூற்போர் குடும்பங்களில் நெசவு கற்றுக்கொடுக்கும் பொருட்டு அவர் இந்த கிராமத்திற்கு வந்தார். சென்ற மூன்று ஆண்டுகளில் அந்த கிராமத்திலிருக்கும் சுமார் 20 வாலிபர்களுக்கு நெசவுப்பயற்சியளித்து அந்த கிராமத்தில் உற்பத்தியாகும் நூல் பூராவையும் அங்கேயே நெசவு செய்து விடுகின்றனர். இன்று அவர் பயிற்சி சாலேயில் 12 முதல் 18 வரை வயதுடைய சுமார் 12 சிறுவர்களும், 7 சிறுமியினரும் கதர் தொழில்களில் பயிற்சி பெறுகின்றனர். இதில் பலர் ஈரிழை நெசவுப் பயற்சியில் திறமை பெற்று தற்பொழுது ஒரிழை நெசவு செய்து வருகின்றனர். அவர்கள் நெசவு செய்யும் கதர், வேறு சில கிளேகளில் கூலி கொடுத்து, பரம்பரை நெசவாளர்கள் நெய்து தரும் கதரைக்காட்டிலும் நன்ருக இருக்கிறது என்பதை ஒப்புக் கொள்ள வேண்டும்.

செய்த வேலேகள்

நெசவுப் பயிற்சியோடு மூங்கில் ராட்டை செய்தல், கதிர் செய்தல், கதிர் கோட்டமெடுத்தல், நரம்பு செய்தல், (பஞ்சு கொட்டுவதற்காக), கலவை உரம் தயாரித்தல், முதலிய வேலேகளிலும் குழந்தைகளுக்கு பயிற்சி யளிக்கப்பட்டுள்ளது.

சென்ற மூன்ருண்டுகளில் இந்த குழந்தைகள் செய்துள்ள வேலேகளின் சுருக்கம் கீழ்க்கண்டவாறு;

1. தயார் செய்த மூங்கில் ராட்டைகள் 76
2. தயார் செய்த நரம்பு கெஜம் — 1148
3. கதிர் செய்தது — 1236
4. நெசவு செய்தது — 3968 சதுர கெஜம் (22318 சிட்டம்)
5. தயாரித்த கக்கூஸ் குழிகள் — 7
6. கலவை உரக்குழிகள் — 9
7. விவசாயமூலம் வருமானம் ரூ. 67/-
8. நூற்பு, நெசவு மூலம் வருவாய் ரூ. 3990/-

"தினசரி வருமானம்"

பரிசிரமாலய மாணவ, மாணவிகள் தாங்கள் நூற்று நெசவு செய்வதோடு, தங்கள் குடும்பத்தினர் நூற்கும் நூலேயும் நெய்து வருகிருர்கள். இதன் பயனுக ஷை மாணவர்களின் தினசரி வருமானம் குறைந்த பக்ஷம் ரூ. 0–4–11 முதல் அதிக பக்ஷம் ரூ. 0–8–4 வரை வருகிறது. எல்லாவற்றிலும் அதிக வருமானம் கிடைப்பது ஸ்ரீ ரங்கசாமி என்ற 12 வயது சிறுவனுக்கே!

வாழ்க்கைமுறை மாற்றம்

இந்த பரிசிரமாலய வேலேகள் சென்ற மூன்ருண்டுகளாக இந்த கிராம சிறுவர்களிடையே ஆசிரம வாழ்க்கைப் பழக்கங்களேயும், நல்லொழுக்கத்தையும் வளர்த்து வந்துள்ளது. காலே 4 மணிக்கு துயிலெழுந்து, பிரார்த்தனேக்குப் பிறகு சுமார் 1 மணி நேரம் பொதுப் படிப்பு நடைபெறுகிறது. மாலேயிலும் 6 மணிக்கு பிரார்த்தனேக்குப் பிறகு இரண்டு மணி நேரம் நூற்பு யக்ஞத்துடன், கல்விப் பயிற்சியளிக்கப்படுகிறது. இம் முறையில் வாழ்க்கையின் அனுபவத்திலேயே பயிற்சி பெற்றுள்ள சிறுவர்கள் சாதாரணப் பள்ளிக்கூடங்களில் மூன்று வருடகாலம் கற்றிருக்கக்கூடிய கல்வியறிவைவிட அதிகம் நுணுக்கமான அறிவு படைத்தவர்களாகவே தென்படுகின்றனர்.

பொது போஜனசாலே

இம் மாணவர்கள் இம்மாதிரி உழைப்பதோடு மட்டுமின்றி, ஒன்று சேர்ந்து வாழவும் கற்றுள்ளனர். தற்சமயம் அனேவரும் சேர்ந்து ஒரு போஜன சாலே நடத்துகின்றனர். அதில் ஒரு வாரம் முழுதும் மூன்று வேளே சாப்பாட்டிற்கும் சேர்ந்து ரூ. 2—8—0 முதல் ரூ. 3—0—0 தான் ஆகின்றது. தனது வருமானத்தில் இதை ஈடு செய்ய முடியாத சிறுவர்களுக்கு ஆசிரியர் ஸ்ரீ வைரலிங்கம் நூற்பு, நெசவில் செய்யும் உதவிமூலம், அதிக வருவாய் தேடித்தருகிருர். ஆசிரியரும், அவரது குடும்பத்தினரும் இதே போஜன சாலேயில்தான் உணவருந்துகிருர்கள். அவர் தனது ஊதியம் முழுதையும் இந்த பரிசிரமாலய வேலேகளுக்கும், போஜன சாலேக்குமே கொடுத்துவிடுகிருர்!!

விவசாயம்

சென்ற ஆண்டு 1952-ல் கிராமத்திற்கு அருகாமையிலுள்ள சுமார் 20 சென்டு நிலத்தில் மாணவ, மாணவிகளின் உதவியால் விவசாயம் செய்ததில் 12 படி கம்பு கிடைத்தது- 1953-ல் சுமார் 1 ஏக்கர் நிலத்தில் விவசாயம் செய்ததில் 172 பட்டணம் படி கம்பு விளேந்துள்ளது. சுமார் ரூ. 67/- விவசாய வருமானம் கிடைத்திருக்கிறது. அடுத்த வருடம் இம் முயற்சியை வளர்க்க கிராம வாசிகள் சுமார் மூன்று ஏக்கர் நிலத்தை இந்தப் பயிற்சி சாலேக்காக ஒதுக்கியுள்ளார்கள். தொழில் வளர்ச்சியோடு கல்வி வளர்ச்சிக்காக மேலும் ஒரு ஆதாரக் கல்வி பயிற்சி பெற்ற ஆசிரியர் உதவியிருந்தால், இந்த பயிற்சிசாலே ஒரு சம்பூரண கல்விச் சாலேயாகத் திகழ்வதுடன், "காஞ்சன முக்தி"யையும் காரியசாத்தியமாக்கக்கூடும்.

— அ. நடராஜன்

3-JAN 1956

(26ம் பக்கத் தொடர்ச்சி) அமெரிக்க ராணுவ உதவி...

பிரிட்டிஷ் பார்லிமெண்டு அங்கத்தினர்கள் சிபார்சு

"இதைத்துடர்ந்து பிரிட்டிஷ் பார்லிமெண்டு அங்கத்தினர்கள் வெளியிட்டிருக்கும் ஒரு அறிக்கையில் பிரிட்டன் தனது வெளிநாட்டுக் கொள்கைகளேயே முற்றிலும் மாற்றிக்கொண்டு, அமெரிக்காவுக்கும், ரஷ்யாவுக்கும் இடையே தோன்றிவரும் மோதல்களிலிருந்து விலகிவிடவேண்டுமெனக் கூறுகிருர்கள். தற்சமயம் பாதுகாப்புக்காக பிரிட்டன் செலவு செய்யும் தொகை காரணமாக அது என்றுமில்லாத அளவு பொருளாதார ரீதியில் அமெரிக்க நிர்ப்பந்தங்களுக்கு, நாளுக்கு நாள் அதிகம் உள்ளாக வேண்டியிருப்பதால், உலகப் பிரச்னைகளில் எல்லாம் அமெரிக்காவுக்கு பிரிட்டன் ஒத்துப்பாடுவதைவிட வேறு வழியில்லை என்று கருதுகிருர்கள்!!"

சின்னஞ் சிறு மால்டா தீவும் சீறுகிறது!

பிரிட்டிஷ் மேலாதிக்கத்திலிருக்கும், மத்திய தரைக்கடலின் நடுவிலிருக்கும், மால்டா தீவில் தோன்றியுள்ள ஒரு சிக்கலைப்பற்றியும் கூறுவது பொருத்தமாக இருக்கும். அச் சிறு தீவில் சுமார் 4000 அமெரிக்க விமானப்படை சிப்பந்திகள் தளம் அமைத்து தங்குவதற்கு பிரிட்டன் இசைந்துள்ளது. இதை அத் தீவின் பிரதம மந்திரி டாக்டர் போர்க் ஒலீவியர் என்ற சட்ட நிபுணர் "அர்த்தமற்றது" என்று வெறுப்படைந்து எதிர்க்கிருர்!! "தேவதைகள் நடமாட தயங்கும் இடங்களில் முட்டாள்கள் கூத்தாடுகிருர்கள்" என்ற பழமொழிதான், நமது அண்டைநாட்டு ராணுவ உதவி பேரங்களைப் பற்றி கேள்வியுற்ற நமக்கு ஞாபகம் வருகிறது!!!

— அ. சுப்பராயலு.

(25-ம் பக்கத் தொடர்ச்சி)

பல ராஜ்யங்களில் கல்வி முறை மாற்றம்

கல்வி அபிவிருத்தி

தேசத்தில் படித்தவர்களிடையே பரவிவரும் வேலையில்லாத் திண்டாட்டத்தைப் போக்க மத்திய அரசாங்கம் முதல் ஐந்தாண்டு அபிவிருத்தி திட்டத்தை விரிவாக்கி சுமார் ரூ. 150 கோடி அதிகம் செலவு அனுமதிக்க முன்வந்துள்ளது ஞாபகமிருக்கும். அதில் ஆரம்பக் கல்வி வளர்ச்சி மூலம் சுமார் 80,000 படித்த வேலை யில்லாதோருக்கு ஆசிரியர் வேலை கிடைக்கக்கூடும் என்று மதிப்பிடப்பட்டிருந்தது. இத்திட்டத்தின்கீழ் உத்திரப் பிரதேச சர்க்காரும், பீஹார் மாகாண சர்க்காரும் தயாரித்துள்ள ஆரம்பக் கல்வித் திட்டத்தின் சில முக்கிய அம்சங்களை கீழே தந்துள்ளோம்.

உத்திரப் பிரதேசம்: ஆரம்பப் பள்ளிகளில் விவசாயப் பயிற்சி

கிராமங்களிலுள்ள நடுத்தர வகுப்பு பள்ளிக்கூடங்களில், பள்ளிக்கூட வேலை நேரத்தில் சரி பாதி நேரம் விவசாய வேலைகளில் பயிற்சியளிப்பதற்காக ஒதுக்கப்படும். தினந்தோறும் இரண்டு மணி நேர உழைப்பும், வாரந்தோறும் ஆறு மணி நேர விவசாய போதனு முறை வகுப்புகளும் விவசாயத்திற்காக ஒதுக்கப்பட்டிருக்கிறது. பள்ளிக்கூடத்தில் போதனைக்கு இடமளிக்கப்பட்டிருக்கும் மற்ற விஷயங்கள் மூன்றேதான் இவை. (1) பாஷை (2) கணக்கு (3) விஞ்ஞானம்.

கிராமங்களில் 33,000 பண்ணைகள்

இம்மாதிரி நடக்கும் ஒவ்வொரு பள்ளிக்கூடத்திற்கும் 10 ஏக்கர் விஸ்தீர்ணமுள்ள ஒரு பண்ணை இணைக்கப்பட்டிருக்கும். ஆரம்பப் பள்ளிக்கூடங்களுக்கு 5 ஏக்கர் விஸ்தீர்ணமுள்ள பண்ணைகள் இணைக்கப்படும். இம்மாதிரி ஜில்லா போர்டுகளும், மற்ற ஸ்தல ஸ்தாபனங்களும் நிர்வகித்துவரும் பள்ளிக்கூடங்களுக்காக சுமார் 3000 பத்து ஏக்கர் விஸ்தீர்ணமுள்ள பண்ணைகளும், சுமார் 30,000 ஐந்து ஏக்கர் விஸ்தீர்ணமுள்ள பண்ணைகளும் கொடுத்தாக வேண்டும். இந்தப் பண்ணைகளின் வருமானத்திலிருந்து குழந்தைகளின் பாட புத்தகங்கள், ஆசிரியர்களுக்குச் சிறிது பொருளுதவி, மாணவர்களின் கல்விச் செலவு (பள்ளிக்கூட பீஸ்) முதலியன போக, சிறிது பொருள் பள்ளிக்கூடத்தின் தேவைக்கும் மிச்சப்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

பீஹார்: ஆதாரக் கல்வியும் — ஆசிரியைகளும்

பீஹார் மாகாணத்திலுள்ள சுமார் 24,000 ஆரம்பப் பள்ளிக்கூடங்களில் சுமார் 8000 பள்ளிக்கூடங்களை ஆதாரக் கல்விச்சாலைகளாக்கப்படும். இதன் பயனுக தற்சமயம் 6 முதல் 11 வயதுவரை பள்ளிக்குச் செல்லும் சுமார் 14 லட்சம் குழந்தைகளோடு, மேலும் சுமார் 4 லட்சம் குழந்தைகள் கல்வி கற்க வசதி ஏற்படும்.

அடுத்த பள்ளி ஆண்டு முதல் ஆரம்பப் பள்ளிக்கூடங்களில் ஆண் குழந்தைகளுக்கென தனி கல்விச்சாலைகளும், பெண் குழந்தைகளுக்கென தனி பள்ளிக்கூடங்களும் இரா. பள்ளி ஆசிரியர்களாக அதிகமாகப் பெண்களைத் தேர்ந்தெடுப்பதற்கு உற்சாகமூட்டப்படும். ஒவ்வொரு ஆரம்பப் பள்ளியிலும் குறைந்த பட்சம் இரண்டு பெண் ஆசிரியைகளாவது இருக்கும்படி ஏற்பாடு செய்யப்படும்.

— வி. துரைராஜன்.

சர்வோதய பக்ஷ விற்பனைக் கமிஷன்.

பொங்கல் சர்வோதயபக்ஷ விசேஷ விற்பனை கமிஷன் ரூபாய்க்கு 0-2-0 வீதம் வரும் பிப்ரவரி 12உ வரைதான் வழங்கப்படும். எல்லா அகில பாரத சர்க்கா சங்கக் கிளைகளிலும் இருந்து இச்சலுகையை பெற்றுக்கொண்டு கதரன்பர்கள் தங்கள் தேவைக்கு அத்தாக்ஷிபெற்ற கதரையே வாங்க வேண்டுமாய்க் கோரப்படுகிறர்கள். அத்தாக்ஷி பெறாத போலிக்கதரை கதரென்று நம்பி ஏமாறாதீர்கள்.

அகில பாரத சர்வ சேவா சங்கம்.

(இந்தப் பத்திரிகை கையினுல் செய்த காகிதத்தில் அச்சிடப்பட்டது.)

இந்த இதழில்

சர்வோதய பக்ஷம் 25
பர்மா தேசத்தில் நிலச்சீர்திருத்தம் 25
பல ராஜ்யங்களில் கல்வி முறை மாற்றம் 25
பூமிதானமா? ரத்தக்கிளர்ச்சியா? 26
அமெரிக்க ராணுவ உதவி; சில அனுபவங்கள் 26
"நைனுக்கவுண்டன்வலசு: தமிழகத்தின் பவனர் 27

"கிராமோதயம்" சந்தாவிபரம்:- தனிப்பிரதி 0-1-0 வருட சந்தா ரூ. 1-8-0 அகில பாரத சர்க்கா சங்கக் கிளைகளில் கிடைக்கும்.

Edited and Published by B. Govindaswami for All India Spinners' Association, (Tamilnad Branch) Tirupur. Printed by S. Subramaniam at the Kamala Printing Press, Tirupur.